RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S16

# The Role of Education in Social Change

## சமுதாய மாற்றத்தில் கல்வியின் பங்கு

**A. Iyyappan** [a,*]

[a] Department of Tamil, Mahalakshmi womens college of arts and science, Paruthippattu, Chennai-600071, Tamil Nadu, India.

*Corresponding author Email: yappanvels5164@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S16

Received: 13-04-2022; Revised: 12-07-2022; Accepted: 16-07-2022; Published: 19-08-2022

**Abstract:** It is education that takes society on the path of progress and enriches it. Such education plays a very important role in societal needs and change. Therefore, changes in education are made in the interest of society. People have known since ancient times that education is not for imparting knowledge, but the real purpose of education should be to teach a man higher quality and make him a better man. Education and teaching methods have also changed as education in Tolkapiyam, education in the Sangam era, education in the Gurukulam era, education in the Pallavar era, education in the Nayakkar era, education that was imparted in porches, education in the British era, today's education, computer-based education, professional education, distance education, technical education, and online education. Learned people are always held in high esteem and respect in society.

**Keywords:** Education, Teaching Methods, Gurukulam, Modern Education

**Language:** **Tamil**

## முன்னுரை

கல்வி ஒருவருடைய வாழ்க்கையின் கலங்கரை விளக்கம் ஆகும். எவ்வகை செல்வம் பெற்றிருந்தாலும் ஒருவருடைய வாழ்க்கையை வளமாக்குவது கல்வியே ஆகும் அதுவே நமக்கு அழியா செல்வமாகவும் விளங்குகிறது. அத்தகைய கல்வி காலம் தோறும் சமுதாயத்தில் எவ்வகை மாற்றங்களை பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை வழி காணலாம்.

## கல்வி -விளக்கம்

கல்வி என்பது கல் (ஆய்வு செய்) என்ற வேர்ச்சொல்லில் இருந்து வருகின்றது. (1) கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல் Education என்பதாகும் கல்வியானது உலகில் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்வது கல்வியாகும். இதனால் மற்ற செல்வங்களை விட கல்வியே சிறந்தது என்று நம் முன்னோர்கள் கருதினர் இதனை

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை"

என்று கல்வியின் சிறப்பை வள்ளுவர் விளக்கக்காணலாம் (Manickam, 2012).

நாலடியாரும் கல்வியின் சிறப்பைக் கூறுமிடத்து கல்வி அழகே அழகு மற்றவை ஒரு மனிதனுக்கு சிறப்பை அளிக்காது என்கிறார்.

## கல்வியின் பெருமை

நம் முன்னோர்கள் கடலைப் போல் கல்வியானது ஆழமானதாகவும் அகலமான தாகவும் காணப்படுவதாகக் கருதினர். கல்விக்குக் கரை இல்லை கற்றது கைமண் அளவாகவும் வாழ்வில் நம் கல்லாதது உலக அளவாகவும் கருதினர். அதனால்தான்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்"

என்று கற்றோரின் பெருமையையும், கல்வியின் சிறப்பையும் விளக்குகிறார் (Manickam, 2012).

கற்றோர்க்குச்சமுதாயத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருந்ததைப் பல பாடல்களில் சான்றாக நாம் காணலாம்.

## தொல்காப்பியத்தில் கல்வி

தொல்காப்பியர் காலத்தில் கல்வி கற்பதற்காக பிரியும் பிரிவு குறித்து கூறப்பட்டுள்ளது

“ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன”

என்ற நூற்பாவின் வழி கற்றவரை தூதாக அரசன் அனுப்பிய செய்தியும், கல்வியின் பொருட்டு நிகழும் பிரிவு காலம் மூன்று ஆண்டுகள் மிகாமல் இருக்க வேண்டும் என்பதை தொல்காப்பியர் வரையறுத்த காணலாம் (Sanmugam Pillai, 1996). கல்வியின் பெருமையை மேலும் மெய்ப்பாடுகள் எனும் பகுதியில் பெருமித உணர்வு ஒருவருக்கு கல்வியால் ஏற்படும் என்பதை விளக்குகிறார்.

## சங்க காலத்தில் கல்வி

சங்க காலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கிலிருந்து இருக்கிறது. தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால் தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் மற்றும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது. (மா, ராச, மாணிக்கனார், சங்ககாலத் தமிழகத்தில் முதல் அறிவொளி இயக்கம், வரலாற்று இதழ், 1996) (5) என்ற மாணிக்கனாரின் கூற்றுப்படி தமிழே கற்பித்தலில் முதன்மையாக இருந்தது என்பதை நாம் அறியலாம்.

சங்க இலக்கியப் பாடலொன்று கல்வி கற்பதினால் சமுதாயத்தில் ஒருவருக்கு ஏற்படும் பயனை குறித்து பின்வரும் பாடல் விளக்குகிறது.

“பிறப்போர் அன்ன உடன் வயிற்றுள்ளும்

சிறப்பின் பாலால் தாயின் மனம் திரியும்

ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்

மூத்தோன் வருக என்னாது அவருள்

அறிவுடையோன் ஆறு அரசன் செல்லும்

வேற்றுமைத் தெரிந்த நாற்பாலுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே”

கல்வியில் சிறந்து விளங்குபவர் மன்னனாலும், சமுதாயத்தாலும் சிறந்த முறையில் மதிக்கப்படுவர். கல்வி கற்றவரை சான்றோர் எனவும் அழைத்தனர். மன்னனும் கல்வியில் சிறந்து விளங்குபவரையே தூதாக அனுப்பினான் என்பதால் கல்வி கற்றவர் அடையும் பயனை இதன்வழி அறியலாம் (Puliyur kesigan, 1958).

## சங்கம் மருவிய காலத்தில் கல்வி

சங்கமருவிய காலத்தில் நீதி நூல்கள் மிகுதியாகத் தமிழகத்தில் தோன்றின. நீதி நூல்கள் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் எடுத்துரைக்கின்றன. மக்களுக்கு வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக கல்வி அறிவு விளங்குகிறது. இதனை

“ஒருவருக்குக்

கற்றலின் வாய்த்த பிற இல்லை என்றுள்ளும்”

செல்வத்தைப் போல ஒருவருக்கு வலிமையுடையது வேறில்லை. கல்வியைப் போலத் துணையாவது பிறிதில்லை. என்ற கருத்தை இப்பாடல் வரிகள் மூலம் நாம் அறியலாம் (Valliyappa, 2011).

## பள்ளி என்ற அமைப்பு உருவான விதம்

கல்வி என்பது அறிவை புகட்டுவதற்காக மட்டுமல்லாமல், ஒரு மனிதனுக்கு உயரிய பண்புகளை போதித்து, அவனை உயர்ந்த மனிதனாகச் செய்வதே கல்வியின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும் என்பதைப் பண்டைய கால மக்கள் அறிந்திருந்தனர் குருகுல கல்வி முறையிலும் இதனைப்பின்பற்றினர்

குருகுல கல்வி முறையில் குரு வசிக்கும் இடத்திற்கே மாணவன் சென்று, தங்கியிருந்து கல்வி கற்றல் முறை பின்பற்றப்பட்டது. இங்கு அனைவருக்கும் ஒரேவிதமான கல்வி முறை போதிக்கப்பட்டது. எவ்வித பேதமும் இன்றி கல்வி அனைவருக்கும் சமமாக அளிக்கப்பட்டது

பண்டையக் கல்வி முறையில் இன்றுபோல் பாட நூல்கள் வழி கற்பித்தல் இடம்பெறவில்லை. அக்கல்வி முறையில் ஆசிரியர்களே அறிவுப் பெட்டகமாகத் திகழ்ந்தனர். கற்பித்தலுக்கு அவர்கள் செவி வழியாகவும், ஓலைச்சுவடிகளை பயன்படுத்தியும் கற்பித்தல் திறனை மாணவர்களிடம் வளர்த்தனர்

மாணவர்களின் கற்றல் திறன் ஆனது ஆசிரியர் கூறுவதைத் திரும்பக் கூறுதல், மனனம் செய்தல், என்ற முறைகளை கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உதவியாக இருந்தது.

கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் பள்ளி என்றும் அழைத்தனர். ஓதும் பள்ளி என்று திவாகர நிகண்டும் குறிப்பிடக் காணலாம். பண்டையக் காலத்தில் கல்வியானது கோயில்களையும், மடாலயங்களையும் மையமாகக்கொண்டு விளங்கியது. பள்ளி என்ற சொல் சமண, பௌத்த சமயங்கள் நமக்கு அளித்த கொடையாகும்.

## பல்லவர் காலத்தில் கல்வி

பல்லவர் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் பெரும் மாற்றங்களைச் சந்தித்தது. யுவான்சுவாங் அவர்கள் தன்னுடையப் பயண நூலில் காஞ்சிபுரத்தைப்பற்றி குறிப்பிடும்போது கற்றலில் மையமாகக் காஞ்சிபுரம் விளங்கியதாகக் குறிப்பிடுகிறார்.

இந்தியாவின் பிற பகுதியிலிருந்தும், அயல்நாடுகளில் இருந்தும் மாணவர்கள் காஞ்சி கடிகைக்கு வந்து கல்வி பயின்றனர். புத்த அறிஞர்கள் பலரும் கல்விக்காக காஞ்சிபுரம் வந்ததாகச் கூறுவர். நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராக பொறுப்பு வகித்த தர்மபாலர் காஞ்சி நகரத்தைச்சார்ந்தவர். முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாசப் பிரகாசனம் என்ற வடமொழி நாடகத்தை இயற்றியுள்ளார். பல்லவர் காலத்தில் வட மொழியின் ஆதிக்கம் மிகுந்து இருந்தாலும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் இனிய தமிழ்மொழியில் பக்திப் பாடல்களைப் பாடி தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்தனர்.

## நாயக்கர் காலத்தில் கல்வி

நாயக்கர் ஆட்சிக் காலம் ஆனது தமிழரல்லாத அந்நியரின் ஆட்சியாக அமைந்தது. கலை இலக்கிய வளர்ச்சியில் தொய்வு காணப்பட்டது. மன்னர்கள் புலவர்களை ஆதரித்தல் குறைவாகவே காணப்பட்டது. வறுமையும் பஞ்சமும் தலைதூக்கி இருந்ததால் கல்வியில் மாற்றங்கள் மிகக் குறைந்த

அளவே காணப்பட்டது. ஆனால் இக்காலத்தில் தான் தனிப்பாடல்கள், புராணங்கள், சிறு காப்பியங்கள் போன்றவை தோன்றியது. புலவர்களுக்கு மன்னனின் ஆதரவை விட மக்களின் ஆதரவு மிகுந்து காணப்பட்டது.

## திண்ணைப் பள்ளிகள்

ஆங்கிலேயரின் வருகைக்கு முன் தமிழகத்தில் கற்றல் முறையானது பெரும்பாலும் திண்ணைப் பள்ளிகள் மூலமே நடைபெற்றது

"திண்ணைப் பள்ளிகள் உள்ளூர் சார்ந்து, ஓராசிரியர் தொடக்கக்கல்வி அமைப்புகள் ஆசிரியரின் வீட்டு திண்ணைகளிலோ அல்லது கிராமத்து முக்கியஸ்தர்களின் வீட்டுத் திண்ணைகளிலோ அல்லது மரத்தடியிலோ நடத்தப்பட்ட இப்பள்ளிகளை ஆங்கிலேயர் 'பையல்' (pyal-varanda) பள்ளிகள் என்றழைத்தனர். ஒரு ஊருக்கு அல்லது நான்கைந்து ஊர்களுக்கு ஒன்று என, சுமார் 7-8 மைல் தூரம் நடக்கும் அளவில் இப்பள்ளிகள் இருந்தன.

திண்ணைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆண்டுகளாக 7 முதல் 8 ஆண்டுகள் அமைந்திருந்தன. கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் பணமாகவோ, பொருளாகவோ ஆசிரியருக்கு முறையாகச் சம்பளம் தரப்பட்டது.

திண்ணைப் பள்ளிகளுக்கென்று முறைப்படுத்தப்பட்ட பாட திட்டம் எதுவும் இல்லை. மாணவர்களின் கற்றல் திறனை அடிப்படையாகக் கொண்டே கல்வியானது கற்பிக்கப்பட்டது.

## ஆங்கிலேயர் காலத்தில் கல்வி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இரு வகையான கல்வி முறைகள் பின்பற்றப்பட்டன. பழைய கல்வி முறை, புதிய கல்வி முறை இதில் பழைய கல்வி முறையில் கல்வியைக் கற்பித்தவர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர். எழுத்துக்களை மண் தரையில் எழுதுதல், ஓலையில் எழுதுதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

புதிய கல்வி முறையில் ஆங்கிலேயர்கள் சமுதாயத்தில் மட்டுமல்ல கல்வியிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தினர். அதில் குறிப்பிடத்தக்கவை, அனைத்து இன மக்களுக்கும் வேறுபாடின்றி கல்வி அளித்தல், இதனால் கல்வியில் சம வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஏற்றத்தாழ்வுகள் களையப்பட்டது. மக்கள் கல்வியறிவு பெற்றதன் பயனாக சீருடை அணிதல், உணவு உண்ணும் முறை ஆகியவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. மதச்சார்பின்மை மலரத் தொடங்கியது.

ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் கல்வி கற்க தொடங்கினர். பல்துறை சார்ந்த புதிய கல்வி முறைகளை தோற்றுவிக்கப்பட்டன. மேற்கத்திய முறைக் கல்வியையும் பலர் பின்பற்றத் தொடங்கினர். இவ்வாறு ஆங்கில கல்வி முறையானது மாற்றத்தை சமுதாயத்தில் மட்டுமல்ல பல துறைகளிலும் ஏற்படுத்தியது

## தற்கால கல்வி முறை

இந்தியா விடுதலை அடைந்த பின் கல்வியில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தேசிய அளவில் அரசுகளும் பெரும்பாலும் சமுதாய மாற்றத்திற்கு கல்வியையே பெரிதும் நம்பியிருந்தனர். கல்வியில் மாற்றங்கள் நிகழ கல்விக் குழுக்களில் பரிந்துரையும் ஒரு காரணம் எனலாம். மெக்காலே கல்வி முறை இந்திய கல்வி முறையில் பல மாற்றங்களை கொண்டு வந்தாலும், வளர்ந்து வரும் நாட்டின் வளர்ச்சிக்கு போதுமானதாக இல்லை எனலாம். மாணவர்களின் கல்வி தேவைகளை மனதில் கொண்டும், எதிர்கால நலனைக் கருதியும் கல்வியானது உருவாக்கப்பட வேண்டும் என்ற குரல் மேலோங்கிய நிலையில் கல்வியில் பல வித மாற்றங்கள் உருவாயின இதனைப் பின்வருமாறு வகைப்படுத்த காணலாம். கணினி வழிக் கல்வி, தொழில் கல்வி, தொலைத்தூரக் கல்வி.

## தொழில்நுட்ப கல்வி

சமூகத்திற்கு என்ன தேவையோ அவைகளை பூர்த்தி செய்ய தேவையான திறன்களை உருவாக்கும் விதமாக கல்வி முறையானது அமைய வேண்டும். கல்வி என்பது வேலை தேட மட்டுமல்ல, அது வாழ்வை வளப்படுத்துவதாக அமைய வேண்டும்.

## இணையவழிக் கல்வி

தகவல் பரிமாற்றத்திற்காக இன்றைய உலகில் பல்வேறு இடங்களில் உள்ள இணைய தளங்களை கணினிகள் மூலம் ஒன்று சேர்க்கும் மாபெரும் தொழில்நுட்ப வலைப்பின்னலே இணையும் ஆகும். இணையத்தின் பயன்பாடு இல்லாத துறைகளே இல்லை என்ற அளவிற்கு மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்க இன்றியமையாத ஒன்றாக இன்றைய சூழலில் இணையம் விளங்குகிறது. இணையவழியில் மாணவர்களுக்கு விளக்க படங்களுடன் கற்பித்தல் திறன் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. இன்றைய கொரோனக் காலகட்டத்தில் கல்வி முறையானது பெரும்பாலும் இணைய வழியில் தான் நடைபெற்று வருகிறது. மாணவர்கள் வகுப்பில் கைப்பேசி பயன்படுத்தக் கூடாது என்ற நிலை மாறி, பாடங்கள் அனைத்தும் கைப்பேசியை பயன்படுத்தியே நடைபெற்று வருகின்ற சூழலை இன்றைக்குக்காணமுடிகிறது.

## முடிவுரை

கல்வியானது சமுதாய தேவைக்கும் மாற்றத்திற்கும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்பதால், கல்வியில் மாற்றங்கள் சமுதாய நலன் கருதியே அமைகிறது. கல்வியானது வியாபார நோக்கமின்றி சேவை நோக்கமாக அமைந்தால் மட்டுமே வரும் காலங்களில் மாணவர்களின் எதிர்காலம் வளம் மிக்கதாக அமையும். அனைவருக்கும் தேவை முறைப்படுத்தப்பட்ட கல்வி.

## References

Manickam, S., (2012) Thirukkural Theylivurai, Manikavasagar Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (1958) Purananuru, Paari Niliyam, Chennai, India.

Sanmugam Pillai, M., (1996) Tolkappiyam, Mulai Nilaiyam, Chennai, India.

Valliyappa, A., (2011) Pathinen Keelkanaku Books, Ainthinai Pathippagam, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

A. Iyyappan, The Role of Education in Social Change, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 28-32. DOI: https://doi.org/10.54392/ijmrd223S16